(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு க. இராசாராம்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்ட. முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு க. இராசாராம்: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஐந்தாம் திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) ஐந்தாம் திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(4) 1972–73-ம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை மீது பொது விவாதம்.

* திரு எ. பாலையா: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த துணை மானியக் கோரிக்கையில் 8 கோடி 97 லட்சம் ரூபாய்க்குத் துணை மதிப்பீடுகள் மானியக் கோரிக்கைகளாக வருகின்ற நேரத்தில் எங்களுக்கெல்லாம் ஒரு ஐயப்பாடு ஏற்படுகிறது. காரணம்,